**Akhbar :** Makkal Osai

**Tarikh :** 18 Mei 2022

**Muka surat :** 10

**Tajuk :** Kekalkan perpaduan di antara rakyat Malaysia - kata Datuk Halimah

**Terjemahan :**

Datuk Halimah Mohamed Sadique menyeru semua rakyat Malaysia supaya mengukuhkan sikap bersatu padu di negara Malaysia yang berbilang kaum. Beliau juga berkata kerajaan Keluarga Malaysia sedang menjalankan banyak insentif bagi mengekalkan perpaduan di antara semua kaum.

Struktur Keluarga Malaysia mempunyai pelbagai pelan yang memanfaatkan rakyat Malaysia. Jadi teruskan aktiviti-aktiviti yang bermanfaat kepada masyarakat di peringkat nasional, negeri dan daerah. Datuk Halimah juga berkata bahawa Kementerian akan memberi kerjasama supaya aktiviti-aktiviti tersebut berjalan dengan lancar, ketika sidang media selepas Majlis Sambutan Hari Raya Aidilfitri Kementerian Perpaduan Negara.

Perdana Menteri YB Datuk Seri Ismail Sabri Yaakob, Timbalan Menteri Kementerian Perpaduan Negara, YB Senator Wan Ahmad Fayhsal, Ketua Setiausaha Datuk Indera Noridah, Pengarah Akhbar Makkal Osai, S.Kobaalakrisnan dan ramai lagi tetamu khas turut hadir ke majlis sambutan tersebut.

# மலேசியர்களிடையே ஒற்றுமையைப் பேணுவோம்

## டத்தோ ஹலிமா கருத்து



எம். அன்பா

புத்ராஜெயா, மே 18-

பல இன மக்கள் வாழும் மலேசியாவில் நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் வகையில் மலேசியக் குடும்பக் கோட்பாட்டின் கீழ் அனைவரும் ஒற்றுமையைப் பேண வேண்டும் என தேசிய ஒற்றுமைத்துறை அமைச்சர் டத்தோ ஹலிமா முகமட் சாடிக் கருத்துரைத்தார்.

மக்கள் அனைவரிடமும் நல்லிணக்க நட்புறவைத் தொடர்ந்து மேலோங்கச் செய்வதற்கு மலேசியக் குடும்பத்தின் அரசாங்கம் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது.

பல தரப்பு மக்களின் பொதுநலத் திட்டங்களுக்கு மலேசியக் குடும்பம் சிறந்த கட்டமைப்பைக் கொண்டுள்ளது. அதிலும் தேசிய, மாநில, மாவட்ட ரீதியில் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பயனளிக்கக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளும் தொடரப்பட வேண்டும்.

அந்த நிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடந்தேற அமைச்சு என்றும் துணை நிற்கும் என தமது அமைச்சின் நோன்புப் பெருநாள் திறந்த இல்ல உபசரிப்பில் கலந்து கொண்ட அவர் குறிப்பிட்டார்.

அந்த விருந்துபசரிப்பில் பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப், துணை அமைச்சர் வான் அகமட் ஃபைசால், அமைச்சின் தலைமைச் செயலாளர் டத்தோ இண்ரா நோரிடா, மக்கள் ஓசை செயல் அதிகாரி எஸ். கோபாலகிருஷ்ணன், முக்கியப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

